
# පුද්ගලයින් ලියාපදිංචිකිරීමේ දෙපාර්තමේන්තුව
## ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
## Department of Registration of Persons




# ජාතික හැඳුනුම්පත සුරකියි ඔබ සැම තැන
## தேசிய அடையாள அட்டை எங்கும் உங்களைப்பாதுகாக்கும்

අභ්‍යන්තර පරිපාලන අමාත්‍යාංශය

noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆரம்பம்

1954ம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் படி ஆட்களைப் பதிவு செய்கின்ற மற்றும் அடையாள அட்டைகளை வழங்குகின்ற சிந்தனை தோன்றியது. 1962ல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் 1968ம் ஆண்டு 32ம் இலக்க ஆட்களைப் பதிவு செய்யும் சட்டமாக நிறைவேறியதோடு அச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காக 1971 ஐப்பசி 01ம் திகதி ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி 1972ம் வருடம் தொடக்கம் அடையாள அட்டை விநியோகம் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், முதலாவது அடையாள அட்டை 1972ம் ஆண்டு அக்டோபர் 16ம் திகதி விநியோகிக்கப்பட்டது. 1971ம் ஆண்டு 28,37 ஆம் இலக்க அத்துடன் 1981 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை 23 மில்லியனுக்கும் அதிகமான தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி 18 வயதைப் பூர்த்தி செய்த, இலங்கையில் சட்டரீதியாக வசிப்பவர்களைப் பதிவு செய்து அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதோடு 1981 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய ஆட்களைப்பதிவு செய்யும் வயது 16 ஆகக் குறைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்த கறுப்பு-வெள்ளைப் புகைப்படம் 2005.07.01 முதல் வர்ணப் புகைப்படமாக மாற்றப்பட்டுள்ளது. கையெழுத்துக்களின் மூலம் எழுதி விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு பதிலாக 1991.01.01 இன் பின் 16 வயதைப் பூர்த்தி செய்து முதற் தடவையாக அடையாள அட்டை பெறுபவர்கள் தொடர்பில் கணனி மூலம் அச்சிடப்பட்ட அடையாள அட்டைகளின் விநியோகம் 2008.12.16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை தேசிய அடையாள அட்டை அனைத்துப் பரீட்சைகள், ஓய்வூதியப்படி, ஊழியர் சேமலாப நிதியம் கடவுச் சீட்டுக்கள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுதல் போன்றவற்றிற்கு இன்றியமையாததாகும்.

2004 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க வாக்களித்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் இனி வரும் தேர்தல்களின்போது வாக்களிப்பு



2-CM 9972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையமொன்றில் வாக்காளருக்கு வாக்குச் சீட்டு வழங்க முன்னர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அடையாள அட்டையை கட்டாயமாக்குவது தொடர்பாக தேர்தல் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட முன்பதாக இலங்கையின் வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் நிர்வாக ரீதியான நடவடிக்கைகளை எடுத்தமை பற்றி ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்காக அடையாள அட்டைகளை வழங்கும் துரித செயற்றிட்டமொன்று 2005ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி 2006 ஆம் ஆண்டில் சகல பிரதேச செயலக மற்றும் தோட்டப்புற மட்டங்களில் நடமாடும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்தோடு இதுவரை அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாத மக்களுக்கு அடையாள அட்டைகளை துரிதமாக பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2005 ஆம் ஆண்டு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் கணணிமயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பமானது. இந்த வேலைத் திட்டங்களுக்கு இணையாக திணைக்களத்தின் அலுவல்களையும் மீளமைக்கும் அதேவேளை இவ்வளவு காலமும், ஆணையாளர், என அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவரின் உத்தியோக பெயர் ஆணையாளர் நாயகம் என்றும் ஏனைய பதவிகளும் அதற்கேற்ப உயர்தரப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கி வந்த இந்த திணைக்களம் தற்போது உள்நாட்டு நிர்வாக அமைச்சின் கீழ் இயங்குகின்றது இந்த அமைச்சு அமைச்சின் அமைச்சர் கௌரவ ரத்னசிறி விக்கரமநாயக்க அவர்களாவர்.

அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்.

தேசிய அடையாள அட்டை ஒன்றை பெற்றுக் கொள்வது தொடர்பாக அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த விண்ணப்பப்படிவத்துடன் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தரில் ஒருவரிடம் நாடிச் செல்லல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விண்ணப்பதாரி வதிவிடத்தின் கிராம சேவகரிடமோ,

2. தோட்டத்தில் வசிப்பவராயின் தோட்ட அதிகாரியிடமோ,

3. பாடசாலை விண்ணப்பதாரி ஆயின் அப்பாடசாலை அதிபரிடமோ.

இதன்படி தாம் பெற்றுக் கொண்ட விண்ணப்ப படிவத்தினை சம்பூரணமாக பூர்த்திசெய்து, உரிய ஆவணங்களுடன் மேற்குறித்த அலுவலர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்

தான் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கின்ற அடையாள அட்டைகளின் தன்மைகளுக்கு ஏற்ப அச்சிடப்பட்ட (3) மூன்று வகையான படிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன

1. முதன் முறையாக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுதல் (படிவ இல. 01)

2. அடையாள அட்டையில் உள்ள விடயங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் திருத்திய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுதல் (படிவ இல. 08)

3. அடையாள அட்டை தொலைந்தால் அதற்கான இணைப்பிரதியாக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுதல். (படிவ இல. 07)

### 1. முதன் முறையாக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுதல்

அ. இலங்கைக் குடியுரிமையுள்ளவராக இருத்தல் வேண்டும்

ஆ. 16 வயதினைப் பூர்த்தி செய்த நபராக இருத்தல் வேண்டும்.

முதன் முறையாக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளு வற்காக ஆ.ப.தி/வி/1 விண்ணப்பத்துடன் (வெள்ளை அல்லது அதற்குச் சமானமான நிறமுடையது) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.1 விண்ணப்பதாரி 50 வயதிற்குட்பட்டவராயின் கட்டாயமாகப் பிறப்புச் சான்றிதழ் அல்லது உத்தேச வயதுச்சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். (மூலப்பிரதி)

உத்தேச வயதுச் சான்றிதழ் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரி தொடர்பாக, உத்தேச வயதுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட வருடத்தின் ஆடி (யூலை) மாதம், முதலாம் திகதி அவரது பிறந்த திகதியாக கருதப்படும்.

1.2 விண்ணப்பதாரி 50 வயதிற்கு மேற்பட்டவராயின் பிறப்புச் சான்றிதழ் அல்லது உத்தேச வயதுச் சான்றிதழ் இல்லாதவிடத்து அதற்குப் பதிலாக,

➢ பிறப்புப் பதிவிற்கான தேடுதல் விளைவு சான்றிதழுடன் சத்தியக் கடதாசியையும் இணைத்து அவற்றுடன் கீழ்க்கண்ட ஆவணங்களில் சமர்ப்பிக்கக்கூடிய ஆவணங்களையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

- ❖ பாடசாலை விலகல் பத்திரம்
- ❖ ஞானஸ்நான சான்றிதழ்
- ❖ விண்ணப்பதாரியின் பிறந்த திகதி குறிப்பிடப்பட்டுள்ள அவரது பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழின் பிரதி
- ❖ பிறப்புச் சான்றிதழின் இணைப்பிரதி
- ❖ இலங்கைக் குடியுரிமைச் சான்றிதழ் (பிறந்த திகதி குறிப்பிடப்பட்டு இருப்பின்)
- ❖ தோட்ட விலகல் பத்திரம் (பிறந்த திகதி குறிப்பிடப்பட்டு இருப்பின்)
- ❖ கடவுச் சான்றுப் பத்திரத்தின் விபரங்கள் (அடங்கிய) பக்கத்தின் சான்றுப்படுத்திய பிரதி
- ❖ தோட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட பதிவுக் காட் பத்திரம்
- ❖ ஜாதகக் குறிப்பு ஏடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.3 குரு உடை தரித்தவராயின் குரு உடைதரித்ததற்குரிய சான்றிதழ்.

- ❖ குரு உடையை மீளளித்து விலகியவராயின் அச்சமயாசார அலுவல்கள் தொடர்பான திணைக்களத்திலிருந்து பெற்ற சான்றிதழ்.

1.4 விண்ணப்பதாரி விவாகமான பெண்மணி ஆயின் கணவரின் பெயரை தனது பெயருடன் சேர்ப்பதாயின் விவாக சான்றுப் பத்திரத்தின் மூலப்பிரதி

1.5 வெளிநாடு ஒன்றில் பிறந்தவராயின் பிரஜா உரிமைப்பத்திரம். (CIT Act)

1.6 1 3/8" X 7/ 8" அளவினையுடைய 5 வர்ணப் புகைப்படங்கள்.

1.7 முத்திரைக் கட்டணங்கள்

- ➢ 17 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரி ஆயின் ரூ3.00 பெறுமதியினை உடைய முத்திரையினை ஒட்டவேண்டும்.
- ➢ 17 வயதிற்குக் கூடிய விண்ணப்பதாரி ஆயின் ரூ13.00 பெறுமதியினை உடைய முத்திரையினை ஒட்டவேண்டும்.

1.8 வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:

- ➢ கிராம அலுவலரினால் வழங்கப்படுகின்ற வதிவிடச் சான்றிதழ்.
- ➢ மேற்கூறிய ஆவணம் இல்லாதவிடத்தில் மட்டும் கீழ்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதோ சமர்ப்பித்தல் வேண்டும்.
    - ❖ வாக்குரிமை பெயர்ப் பதிவு புத்தகத்தின் சான்றுப்படுத்திய பிரதி.
    - ❖ வங்கிக் கணக்குப் புத்தகத்தின் சான்றுப்படுத்திய பிரதி.
    - ❖ தொலைபேசி கட்டண பட்டியலின் சான்றுப்படுத்திய பிரதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ வீடு அல்லது நிலம் சொந்தமாக இருந்தால் அதற்கான உறுதியின் சான்றுப்படுத்திய பத்திரம்.
- ❖ வரிப்பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு
- ❖ தற்காலிக வதிவிடநபர்கள் சம்பந்தமாக பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கு தெரிவித்ததற்கான கடிதத்தின் பிரதி.

1.9 தொழில் புரிபவராயின் அதை உறுதிப்படுத்தும் சான்றிதழ். (3 மாதத்திற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்) பட்டம் பெற்றவராயின் அதற்கான பட்டச்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உ+ம் ➢ வைத்தியர், பொறியியலாளர் ஆயின் பட்டச் சான்றிதழ் அவசியம்.

**2. அடையாள அட்டையில் உள்ள விடயங்களில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமாயின் திருத்திய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளல்**

திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற அடையாள அட்டையில் உள்ள விண்ணப்பதாரியின் விபரங்களில், மீண்டும் திருத்தத்தினை மேற்கொள்வதற்காக திருத்திய அடையாள அட்டை பெறப்படும் முறை யாகும்.

1. முதற் தடவை பெறப்பட்ட அடையாள அட்டையின் புகைப்படத்துடன் தற்போதைய புகைப்படம் வித்தியாசமாக இருப்பின்.
2. பெயர் மாற்றப்பட வேண்டிய அவசியமாயின்.
3. வசிப்பிடம் வேறுபடுமிடத்து முகவரி மாற்றப்படுதல்.
4. தொழில் மாற்றத்தினால் அல்லது தற்போது வகிக்கும் பதவி மாற்றத்தினால், பதவிப்பெயரை உள்ளடக்கும் பொருட்டு.
5. முதல் அடையாள அட்டையில் காணப்படும் விபரங்கள் தெளிவின்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பலதரப்பட்ட காரணங்களால் அடையாள அட்டை பழுதடைதல்.

7. 1972 மற்றும் 1973ம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகள் விநியோகித்தல் 1990 நவம்பர் 20ம் திகதி 637/ 6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின்படி மேற்குறித்த வருடங்களில் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகள் இரத்துச் செய்யப்பட்டது.

அடையாள அட்டை புதுப்பித்தல் தொடர்பாக ஆ.ப.தி.வி/8 (இளஞ்சிவப்பு நிற எழுத்துக்களில் அச்சிடப்பட்ட விண்ணப்ப படிவம்) கீழ் குறிப்பிட்ட விடயங்கள் சமர்பிக்கப்படல் வேண்டும்.

2.1 தற்போது பாவிக்கப்படுகின்ற அடையாள அட்டை.

2.2 1 3/8" x 7/8" அளவிலான வர்ணப்புகைப்படங்கள் ஐந்து (5)

2.3 ரூபா 15.00 பெறுமதியான முத்திரை.

2.4 தொழில் புரிவதாயின் மூன்று மாதத்திற்குள்ளாக பெறப்பட்ட சேவைச் (தொழில்) சான்றிதழ். வாண்மைத் தொழில் புரிவோர் தமது தொழில் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும்.

உ+ம் ➢ வைத்தியர், பொறியியலாளர் ஆயின் பட்டச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

2.5 தற்போது பாவிக்கப்படும் அடையாள அட்டையின் இலக்கங்கள் தெளிவற்றிருப்பின் அவ்விலக்கங்கள் பாவித்தமையை உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள்.

2.6 தற்போது பாவிக்கப்படும் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள பெயர், பிறந்த திகதி அத்துடன் குறித்த விபரங்கள் வேறுபட்டிருப்பின் அல்லது தெளிவற்றிருப்பின் பிறப்புச்சான்றிதழின் மூலப் பிரதி அல்லது மேலே 1.2 இல் குறிப்பிட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளை இணைக்கவும்.

2.7 திருமணம் புரிந்த பெண்களாயின் தமது துணைவரின் பெயரை அடையாள அட்டையில் சேர்ப்பதாயின் விவாகச் சான்றிதழின் மூலப்பிரதியை இணைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.8 பௌத்த துறவியாக மாறினால் விகாரை தலைமை மத குருவால் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது உபசம்பதா சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

2.9 துறவு நிலையிருந்து சாதாரண வாழ்க்கைக்கு திரும்பினால் பௌத்த அலுவல்கள் அமைச்சிலிருந்து பெற்ற சாதாரண வாழ்க்கைக்கு திரும்பிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

### 3. தொலைந்த காரணத்துக்காக பிரதி அடையாள அட்டை பெறல்.

தேசிய அடையாள அட்டை தொலைந்த காரணத்திற்காக பிரதி அடையாள அட்டை பெற்றுக் கொள்வது தொடர்பாக சகல விண்ணப்பங்களும் ஆ.ப.தி.வி/7 விண்ணப்பப் படிவத்துடன் (பச்சை நிற அல்லது பச்சை நிற எழுத்துக்களால் அச்சிடப்பட்ட படிவம்) கீழ் குறிப்பிட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3.1 தொலைந்த அடையாள அட்டை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பொலிஸ் அறிக்கையின் மூலப்பிரதி. (பெறப்பட்ட திகதியிலிருந்து 6மாதங்களுக்கு செல்லுபடியாகும்).

3.2 1 3/8" x 7/8" அளவிலான வர்ணப்புகைப்படங்கள் (05) ஐந்து

3.3 ரூபா 15.00 பெறுமதியான முத்திரை.

3.4 பிறப்புச்சான்றிதழ் அல்லது மேலே 1.2 இல் குறிப்பிட்ட ஆவணங்கள்.

3.5 தொழில் புரிவதாயின் மூன்று மாதத்திற்குள்ளாக பெறப்பட்ட சேவைச் (தொழில்) சான்றிதழ் வாண்மைத் தொழில் புரிவோர் தமது தொழில் சான்றிதழைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(உ+ம்) வைத்தியர், பொறியியலாளர் போன்ற வாண்மைத் தொழில் புரிவோர் தமது பட்டச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

3.6 தொலைந்த அடையாள அட்டையின் இலக்கம் பாவித்தது தொடர்பில் உறுதிப்படுத்தும் வேறு ஆவணங்கள்.

3.7 வதிவிடச் சான்றிதழ். (கிராம அலுவலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.8 பௌத்த துறவியாக மாறினால் விகாரை தலைமை மத குருவால் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது உபசம்பதா சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

3.9 துறவு நிலையிருந்து சாதாரண வாழ்க்கைக்கு திரும்பினால் பௌத்த அலுவல்கள் அமைச்சிலிருந்து பெற்ற சாதாரண வாழ்க்கைக்கு திரும்பிய சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.


தொலைந்த அடையாள அட்டை தொடர்பாக பிரதி அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு, ஏற்கனவே பெற்றுக்கொண்ட அந்த அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்ட விபரங்களே தொலைந்த அட்டை பெறுவதற்காக சமர்ப்பிக்கும் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிட வேண்டும்.

தயாரிக்கப்பட்ட அடையாள அட்டை தங்கள் கைக்கு கிடைக்கப் பெற்ற உடன் அதனைப் பரிசீலனை செய்யவும் ஏதாவது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பின் உடனடியாக எழுத்து மூலம் குறிப்பிட்டு, குறித்த அடையாள அட்டையுடன் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியவாறு அதனை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும். குறித்த திருத்தங்கள் செய்வது தொடர்பில் அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டது முதல் மாதம் இரண்டை கடந்திருப்பின் அதனை திருத்துவதற்கு, திருத்தல் / புதுப்பித்தல் (படிவம் 8) படிவத்தின் மூலமே அதனை சமர்ப்பிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை பெறும் வழிமுறை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத்திற்கு அனுப்பிய விண்ணப்பங்கள் பெறப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் அடையாள அட்டை விநியோகிக்கப்படும்.

## ஒரு நாள் சேவை

அவசர தேவைகள் நிமித்தம் உடனடியாக அடையாள அட்டை பெறுவதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு நாளுக்குள் அடையாள அட்டை விநியோகம் செய்யும் வேலைத்திட்டம் (ஒரு நாள் சேவை) 2003.09.01 முதல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் தலா ஒரு விண்ணப்பத்திற்கு ரூ. 500 வீதம் அரசின் அனுமதிக்கப்பட்ட முதலாக அறவிடப்படுகிறது. இருந்த போதும் தொலைந்த அட்டைக்கு பதிலாக பிரதி அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களும் 20 வயதுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் முதற் தடவையாக பெறும் (புதிய) அடையாள அட்டைகள் தொடர்பாக விண்ணப்பிக்கும் விண்ணப்ப படிவங்களும் ஒரு நாள் சேவைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

இச்சேவையைப் பெற விண்ணப்பத்தை கையளிப்பதற்கு குறித்த விண்ணப்பதாரி சமுகமளித்தல் கட்டாயமானது. ஆயினும் விண்ணப்பதாரியினால் சமுகமளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் உறவு முறையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் குடும்ப உறுப்பினர் (தாய்/தந்தை/பிள்ளைகள்) விண்ணப்பத்தை கையளித்து அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளவும் வழிவகை உண்டு.

சாதாரண சேவை தொடர்பாக கையளிக்கும் விண்ணப்பங்கள் அதே போல் ஒரு நாள் சேவையில் கையளிக்கும் விண்ணப்பங்கள் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரோ விண்ணப்பத்தை உறுதி செய்தல் கட்டாயமானதாகும்.

### நடமாடும் சேவை மேற்கொள்ளல்

2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க வாக்காளர் இடாப்பு விசேட விதிப் பிரமாணங்களுக்கமைய வாக்களிப்பதற்கு அடையாள அட்டையின் அவசியம் கருதி நடமாடும் சேவையை வேகமாக நடைமுறைப்படுத்தி, அதன் மூலம் கஷ்டப்பிரதேச மக்களிடம் சென்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை கொண்டுவருதல். நடமாடும் சேவை இடம்பெறும் இடங்களில் விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு ஏதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைகின்ற மேலதிக மாவட்டப் பதிவாளர், சமாதான நீதவான், காவல்துறை (பொலிஸ்), கிராம அலுவலர்கள் மற்றும் புகைப்படப்பிடிப்பாளரின் சேவையுடன் தபால் காரியாலயத்தின் சேவையைப் பெறும் வசதிகளையும் பெற்றுக்கொடுப்பதன் மூலம் அந்த பிரதேச மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக் கொடுத்தல்.

கடந்த 4 வருடங்களில் நடமாடும் சேவை மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான விபரங்கள்.

- 2005 ஆம் ஆண்டு நடமாடும் சேவை மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 30 467
- 2006 ஆம் ஆண்டு நடமாடும் சேவை மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 148 767
- 2007 ஆம் ஆண்டு நடமாடும் சேவை மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 71 174
- 2008 ஆம் ஆண்டு நடமாடும் சேவை மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 33 697

## கணனிக் கிளை

2005 ஆம் ஆண்டு தேசிய அடையாள அட்டை விரைவில் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் திணைக்களத்தின் பல்வேறுபட்ட கிளைகளும் கணனிமயப்படுத்தப்பட்டதற்கிணங்க;

- ✓ 2006, மே 2 ஆந் திகதி சுட்டட்டை (விண்ணப்பதாரியின் புகைப்படமும் விபரங்களும்) கணனிமயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதுடன் உலக வங்கியின் அனுசரணையுடன் தகவல் தொடர்பு மற்றும் தொழிநுட்ப நிறுவனத்தின் ஊடாக 2009 ஆம் ஆண்டிற்குள் இந்நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.
- ✓ 2007.01.01 முதல் தேசிய அடையாள அட்டை இலக்கம் கணனி மூலமே வழங்கப்பட்டுவருகின்றது.
- ✓ 2008, ஆகஸ்ட் 25 ஆந் திகதி முதல் விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்களை விரைவாகப் பெற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு இயலுமான வரை திணைக்களத்திற்கு வருகின்ற விண்ணப்பங்களை கணனிமயப்படுத்தும் போது உரிய கிளைகளுக்கு அனுப்பப்பட்ட விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.

- ✓ இத்துடன் கணனி மயப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய அடையாள அட்டைகள் விநியோகத்தின் போது அது தொடர்பான விபரங்களும் உடனடியாக கணனியில் பதியப்படுகிறது. இச் சேவையானது 2008, செத்தெம்பர் 09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அத்தோடு விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளும் விசாரணைகள் தொடர்பில் விரைவாக சேவையை பெற்றுக்கொள்ளவும் இயலும்.

- ✓ இதன் கீழ் திணைக்களத்திற்கு வரும் எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் தமது அடையாள அட்டை தொடர்பான விபரங்களை பிரதான விசாரணைக் கரும பீடத்தில் வழங்கி விரைந்து விபரங்களை பெற்றுக்கொள்ள இயலும். இந்தக் கருமபீடம் வாரத்தின் வேலை நாட்களில் காலை 8.30 முதல் பி.ப 4.15 வரை திறந்திருக்கும்.

- ✓ 1972ம் ஆண்டு முதல் அடையாள அட்டையானது கையினால் எழுதப்பட்டு வந்த நடைமுறைக்கு பதிலாக 2008, டிசம்பர் 16 முதல் கணனி மூலம் அச்சிடுவதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது. முதலில் 1991 ஜனவரி 01 ஆந் திகதியோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களுக்கு இந்த அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு மேலாக இனிவரும் இரண்டு மாத காலப்பகுதிக்குள் அனைத்து அடையாள அட்டைகளும் விநியோகம் செய்யப்படும் பொருட்டு இந் நடவடிக்கை செயல்படுத்தப்படும்.

மகிந்த சிந்தனையின்படி திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளும் கணனிமயப்படுத்தப்பட்டு இலத்திரனியல் அடையாள அட்டை வழங்கும் செயல்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் திணைக்களத்தின் செயற்பாடுகள் பிரதேச செயலக மட்டத்திற்கு பரவலாக்க நடவடிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் 2009 ஆம் ஆண்டு வரை இச் செயற்பாடுகள் பிற்போடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

**கணனிமயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையிலுள்ள விசேட தன்மை**

✓ மிகவும் பாதுகாப்பானதும் சுயவிபரங்களும் அடங்கிய தேசிய அடையாள அட்டையை வழங்குதல். (அதில், உரியவரின் விரல் அடையாளத்தைப்பதித்தல்)

✓ மும்மொழிகளிலும் (சிங்கள, தமிழ், ஆங்கிலம்) விபரங்களை அடக்குதல்.

✓ 15 வயதைப் பூர்த்தி செய்துள்ள அனைவருக்கும் அடையாள அட்டை வழங்குதல்.

✓ வலையமைப்பு மூலம் (Internet) அடையாள அட்டை சம்பந்தமான சகல அறிவுறுத்தல்களையும் பெற்றுக் கொள்ளுதல்.

✓ விண்ணப்பத்தை ஒப்படைத்து ஏழு நாட்களின் பின் அடையாள அட்டையைப் பெறல்.

✓ (e-governance) இதற்கமைய சம்பூரணமான விபரங்கள் பெறுவதற்கு திணைக்களத்தின் www.rpd.gov.lk எனும் இணையத்தள முகவரியைப் பயன்படுத்தலாம்

✓ விண்ணப்பித்த அடையாள அட்டை சம்பந்தமான விபரங்களைப் பெறுதல்.

✓ அரச திணைக்களங்கள் நேரடியாக விரைவில் தரவுகளைப் பெறுவதற்காக தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தல்.

✓ வழங்கப்பட்ட அடையாள அட்டையானது பத்து (10) வருடங்களுக்கு செல்லுபடியானதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அடையாள அட்டை சம்பந்தமாக ஏற்படும் தவறுகளும் குறைபாடுகளும்

1) ஒருவர் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை விண்ணப்பித்தல் (ஒருவர் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்)

2) விண்ணப்பத்துடன் பொய்யான (மோசடி) விபரங்களை சமர்ப்பித்தல் (பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், விவாகப்பத்திரம், பொலிஸ் அறிக்கை, தேடுதல் விளைவுப் பத்திரம், சேவைச் சான்றிதழ் போன்றவற்றைச் சமர்ப்பித்தல்)

3) அடையாள அட்டையை வைத்து கொண்டு இன்னுமொரு அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல்.

4) பிரமாணங்களுக்கு அப்பாற்பட்ட புகைப்படங்களைச் சமர்ப்பித்தல்.

5) அடையாள அட்டையைப் பழுதுபடுத்துதல், படத்தில் மாற்றம் செய்தல், துஷ்பிரயோகம் போன்றவை.

6) அடையாள அட்டையை வேறு விடயங்களுக்குப் பாவித்தல். (உ+ம்) தொலைக்காட்சி நாடாவைப் பெறுவதற்கும் பணம், பொருட்கள் பெறுவதற்கும் அடமானம் வைத்தல்.

7) (5) மேற்படி அடையாள அட்டையொன்றைத் தம்வசம் வைத்திருத்தல்.

8) வழங்கப்பட்ட அறிவுறுத்துதல்களுக்கு அமைய விண்ணப்பிக்காமை.

- ✓ மேற்படி அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பங்களை நிரப்பி அனுப்புதல் விண்ணப்பதாரியின் கடமையாகும்.

**அடையாள அட்டையுடன் தொடர்புடைய நீதி ஆலோசனைகள் சில**

1. அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்பவர், ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் நாயகம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அதனைப் பரீட்சிப்பதற்காக கேட்கும்போது அடையாள அட்டையை ஒப்படைத்தல் வேண்டும்.

2. அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளும் ஒருவர் அதனை வேறொருவரின் பாவனைக்கு அளித்தலாகாது.

3. வேறொருவரின் அடையாள அட்டையை வைத்திருத்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

4. தமக்குரியதல்லாத அடையாள அட்டை ஒன்று கிடைக்கும் போது அதனை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமோ ஒப்படைத்தல் வேண்டும்.

5. அடையாள அட்டையைத் தொலைக்கும் பட்சத்தில் அது தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கோ தெரியப்படுத்தல் வேண்டும்.

6. அடையாள அட்டையை வைத்திருக்கும் ஒருவர்மரணமடைந்தால் அவரின் பின்னுரித்தாளர் அது தொடர்பாக பிறப்பு, விவாக அல்லது இறப்பு பதிவாளரிடமோ அல்லது ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமோ தெரிவித்து அவரது அடையாள அட்டையையும் ஒப்படைத்தல் வேண்டும்.

7. ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட அடையாள அட்டைகளை வைத்திருத்தல் ஆகாது.

8. அடையாள அட்டையில் புகைப்படங்களை மாற்றுதல், விபரங்களை மாற்றுதல், சேதப்படுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதாயின் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் தண்டனைக்குட்படுத்தப்படலாம்.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
Department of Registration of Persons

# දෙපාර්තමේන්තුවට එන මාර්ගය
## திணைக்களத்திற்கு வரும் வழி
## Access to the Department




011 2508022
011 2583199

FAX 011 2593634

e- mail:- rpd@esrilanka.lk

**පුද්ගලයින් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව**
සී 45, කැප්පෙටිපොළ පාර,
කොළඹ 05.

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்**
சீ-45, கெப்பிட்டிபொல மாவத்தை,
கொழும்பு 05.

**Registration of Persons Department**
C 45, Keppetipola Road,
Colombo 05.

අභ්‍යන්තර පරිපාලන අමාත්‍යාංශය
உள்நாட்டு நிருவாக அமைச்சு
Ministry of Internal Administration
51, Sir Ernest De Silva Mawatha, Colombo 07
Tel - 011 2674719

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org